Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No.114 /2021
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –12

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியநாராயணன் | Calling: | சேல்ஸ் மேன் |
| Father's Name: | சுப்ரமணி | Religion: | |
| Village: | வாணியம்பாடி | Age: | 49 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.01.2026 நேரம் : 12.00 PM

(எதிரி ஆஜர் . )

அ.சா.12 முதன்மை விசாரணை.

நான் வாணியம்பாடியில் வசித்து சேல்ஸ் மேனாக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 ஐ தெரியும். கடந்த 2015 ல் வெளியூரில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். பிரச்சனை என்ன நடந்தது என்று தெரியாது. நான் ஊரில் அப்போது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கிறஞர் வேண்டுகோளிற்கு இணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

உஷாபாய் யார் என்றால் என் அக்கா, நாராயணராவ் என் அக்காவின் கணவர். 22.08.2015 ம் தேதி மதியம் 01.30 மணியளவில் என் அக்கா தொலைபேசியில் தொடர்ப்பு கொண்டு அவரது கணவரையும், அவரது மகன் ராஜேஷ்கண்ணாவையும் இளங்கோ குடும்பத்தினர் கத்தியால் குத்திவிட்டு

தப்பி ஓடி விட்டதாக தகவல் சொன்னாரா என்றால் என் அக்கா குடும்பத்துடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லை. தெரிந்தவர்கள் மூலமாக கேள்விபட்டேன். அதன் பிறகு காயம்பட்ட இருவரையும் வாணியம்பாடி அரசு மருத்துவமணைக்கு சென்று பார்த்தேனா என்றால் இல்லை. அவர்கள் இருவரையும் மேல் சிகிச்சைக்காக நான் தான் வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றானா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் உண்மை சங்கதிகளை கூறிவிட்டு தற்போது எதிரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களுடன் சமாதானமாக செல்வதாலும் எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு புறம்பான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சத்தியநாராயணன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.01.27 18:14:40 +0530